# பொதுக்காலம் 15ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

விடிந்தால் போதும் விளம்பரம் தேடும் இவ்வுலகில் இரவில் ஒளிரும் விண்மீன்களாக திகழ அழைக்கிறது இன்றைய வழிபாடு. அடுத்தவரைப் பற்றி அக்கறை கொண்டு மனிதநேயத்தோடு வாழ்வதே கடவுளுக்குச் செய்யும் உண்மையான வழிபாடு.

துன்புறும், தேவையிலிருக்கும் ஒருவருக்கு வழங்கப்படும் அன்பும், ஆற்றப்படும் சேவையும், உடனிருப்பும், உறுதுணையும் இறைவேண்டலுக்குச் சமமாகிறது. அயலானுக்கு ஆற்றப்படும் தொண்டே ஆண்டவனுக்கு ஆற்றும் தொண்டு என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது நல்ல சமாரியன் உவமை.

இன்று நாம் வாழும் சூழலில் ஏழை, எளியோர், இறக்கும் தருவாயிலிருப்போர், தனிமையில் வாடுவோர் இவர்களுக்கு நாம் செய்யும் உதவிகளில், பணிகளில் கடவுள் மாட்சியுறுகின்றார். உதவிக்கரம் நீட்டும் உள்ளங்களுக்கு இறைக்கர வழிநடத்துதல் உறுதி என்பதை உணர்வோம். விளிம்பு நிலையில் இல்லாவிட்டாலும், விளிம்பில் வாழ்பவர்களுக்கு ஒளியாக வாழ முற்படுவோம்.

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது."

என்பதை உணர்ந்து, அடுத்திருப்பவருக்கு கரம் நீட்டுவோம். கரை சேர்ப்போம். சகோதர அன்பில் வாழ்ந்திட அருள் வேண்டி இப்பலியில் கலந்திடுவோம்.

### முதல் வாசக முன்னுரை (இணைச்சட்டம் 30: 10-14)

நாம் கேட்கும் செபங்கள், விண்ணப்பங்கள் அனைத்தையும் நமக்குத் தரவல்லவர் நம் ஆண்டவர். அவர் வெகுதொலைவில் இல்லை. மாறாக, வார்த்தை மிக அருகில் உள்ளது என்று இறைப்பிரசன்னம் பற்றிக் கூறும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை (கொலோசையர் 1: 15-20)

இயேசு சிந்திய இரத்தத்தால் அமைதியை நிலைநாட்ட விரும்பிய இறைவன் இயேசுவைத் திரு அவைக்குத் தலைவராக்கினார். இயேசு, கட்புலனாகாத கடவுளது சாயல், அனைத்தும் அவர் வழியாய் படைக்கப்பட்டது. தன் சிலுவைச் சாவால் உலகனைத்தையும் ஒப்புரவாக்க திருவுளம் அறிந்து வாழ்ந்தார் என்று கூறும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. அன்பின் இறைவா!

எம் திரு அவை சகமனிதர்களோடு அன்பும், பரிவும். இரக்கமும் கொண்டு இயேசு கூறிய மனிதநேய வாழ்வை வாழும் நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. இரக்கத்தின் இறைவா!

எங்களுக்கு அடுத்திருப்பவர்களின் நிலை அறிந்து, எவ்விதப் பாகுபாடுமின்றி உதவிடும் மனநிலையைத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அமைதியின் இறைவா!

நாடுகளிடையே அமைதி, சமாதானம், ஒற்றுமை விளங்கிடவும், தீவிரவாதம், வன்முறை ஒழிந்திடவும் செய்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. குணமளிக்கும் இறைவா!

உடல், மன நோய்களால் வாழும் மனிதர்களைக் குணப்படுத்திடவும், இல்லங்களிலும், மருத்துவமனைகளிலும் துன்புறும் நோயாளிகள் சுகம் பெற்றிட உமதருளைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com